தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.maveeramaal.ch / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2020

**10 வயதுப்பிரிவு**
(01.01.2010 – 31.12.2010 வரையில் பிறந்தோர்)

## வீரத்தமிழர்

ஈழத் தமிழரின் வீர வரலாறு பெருமைமிக்கது. அநுராதபுர நுழைவாயிலிலுள்ள எல்லாள மன்னனின் நினைவுக் கல்லறை, கற்சிலைமடுவிலுள்ள மாவீரன் பண்டாரவன்னியனின் நினைவுக்கல், நல்லூரில் உள்ள யாழ்ப்பாணத் தமிழரசின் கடைசி மன்னன் சங்கிலியனின் தோப்பு போன்றவற்றுடன் குடாரப்புத் தரையிறக்கம், ஆனையிறவு போன்ற பல நினைவிடங்கள் தமிழரின் வழிவழியான வீரத்தின் சான்றுகளாகும்.

தமிழர்தம் உரிமைகளை மீட்கும் அறவழிப் போராட்டங்கள் ஆட்சியாளர்களால் அடக்கப்பட்டன. இதனால் தமிழர்களின் எழுச்சிமிகு போராட்டம் கருவி ஏந்திய வடிவமாகியது. எமது தேசியத்தலைவர் மாமா அவர்களால் முன்னெடுக்கப்பெற்ற தமிழீழ விடுதலைப்போராட்டம், வரலாற்றில் ஏராளமான வெற்றிகளைப் பதித்தது. எம் மண்ணை வன்கவர்வு செய்த படையினரையும், ஒடுக்குமுறையாளர்களையும் புறமுதுகிடச்செய்தது. கோட்டை, கொண்டைச்சி, கொக்காவில், மாங்குளம், பூநகரி, மண்கிண்டிமலை, முல்லைத்தீவு, வவுணதீவு, புளுகுணாவ, கிளிநொச்சி என வீரவரலாற்றுத் தடத்தில் ஆனையிறவு முப்படைத்தளத் தகர்ப்பு ஒரு பெருவீரவரலாறு.

வெல்லமுடியாது என்ற இறுமாப்புடன் யாழ்ப்பாணத்தையும் வன்னிப்பெருநிலப் பரப்பையும் துண்டித்திருந்த ஆனையிறவுப் படைத்தளம் 2000 ஆம் ஆண்டு ஏப்ரல் 22 ஆம் நாள் தமிழீழ விடுதலைப்புலிகளால் வெற்றிகொள்ளப்பெற்றது. இவ்வாண்டு ஆனையிறவு முப்படைத்தளம் வெற்றிகொள்ளப்பெற்றதன் இருபதாவது ஆண்டாகும்.

பெருமளவான படையினரைக் கொண்டிருந்த, வலிமை மிகுந்த படைத்தளமாகக் கொள்ளப்பெற்ற ஆனையிறவு முப்படைத்தளத்தை வெற்றிகொள்வதற்கு 1200 போராளிகளைக் கொண்ட தமிழீழ விடுதலைப்புலிகளின் அணியினர், இத்தாவிலில் ஊடறுத்து நின்று சமராடி வழியமைத்துத் தந்தனர். இது வையகப் போரியல் வரலாற்றில் இடம்பிடித்ததுடன் போர்க்கலைப் பாடமும் ஆகியது. இத்துணைப் பெருமைமிக்க வீரத்தமிழ்ப் பரம்பரையில் வந்த நாம், எம் தாய்நாட்டை மீட்டாள்வது திண்ணம்.

நன்றி,

வணக்கம்.